## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி
## அ.வ.எண். 85/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயபால் | மதம் | : |
| த/பெ | : குப்பன் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**09.08.2024**

**வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பழைய 11 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்தேன் என்றால் அரசு பேருந்து நடத்துனராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் சொத்தை வாங்கியவருக்கு உரிமையுள்ளது என தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் 6/138 விஸ்தீரணம் 57 செண்ட் ஆகும். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்பது தெரியுமா என்றால் வடக்கய்யா என்ற கோட்டிசாமையாவுக்கு பாத்தியமாகும்.

2. சாமையாவுக்கு மொத்தம் எத்தனை வாரிசு என்றால் மொத்தம் 3 வாரிசுகள். மூத்தவர் சித்திரை, 2 வது நபர் கொள்ளாபுரி, 3 வது அரசன் ஆவார்கள். இவர்கள் மூவர் தவிர பொன்னன் என்ற 4 வது மகன் உள்ளார் என்றால் எனக்கு அப்படி தெரியவில்லை. சாமையாவை எனக்கு தெரியாது என்றாலும் நான் பார்த்ததில்லை என்றாலும் அவர் எப்போதோ இறந்துவிட்டார். எனக்கு தெரியாது. வாய்மொழி பாகப்பிரிவினையின் போது நான் இருந்தேனா என்றால் என் அப்பா, சித்தப்பா இருந்தார். நான் அப்போது படித்து கொண்டிருந்தேன். நான் வா.சா.ஆ 1 கிரைய ஆவணம் எழுதும் போது அங்கு உடன் இருந்தேனா என்றால் உடன் இல்லை. ஆனால் ஆவணம் பற்றி தெரியும்.

3. ஆவணத்தில் என்ன என்ன விவரங்கள் உள்ளது என்பது எனக்கு

தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் துரைக்கு சொத்து எப்படி வந்தது என்பது குறிப்பிடவில்லை என்றால் **(சாட்சியிடம் ஆவணம் படிக்க கொடுக்கப்பட்டது)** குறிப்பிடவில்லை. சித்திரை மகன் துரை, ரவி என்றுதான் வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். துரை மகன்தான் ரவி என்றால் சரிதான். வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் சித்திரை மகன் ரவி என எழுதியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் பிச்சைமுத்து, கோவிந்தன் ஆகும். அவர்கள் இருவரும் இறந்துவிட்டனர். வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் கையெழுத்திட்ட கோவிந்தன் சாட்சியா அல்லது உரிமையாளரா என்றால் உரிமையாளர் இல்லை. வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் கோவிந்தன் கையெழுத்திட்டு பின்பு அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 கிரைய ஆவணம் சாமையாவுக்கு பட்டா இருந்து அவருக்கு பின் துரைக்கு கிடைத்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** எனக்கு தெரியாது.

5. சாமையா பெயருக்கு பட்டா இருந்ததை எந்த வருடம், எந்த தேதியில் பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் வகைபாடு சொல்ல முடியுமா என்றால் விவசாய நிலமாகும். ஆனால் தற்போது வீடு கட்டுகிறார்கள். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் "**கொள்ளாபுரி வாரிசான ஆதிமூலம் என்பரிடம் இருந்து அவரது பங்கு மொத்தம் 0.19 செண்ட் நிலத்தை கிரையம் பெற்று நானும் இன்று வரை அனுபவித்து வருகிறேன்"** என்று சொல்லியிருப்பதில் எந்த வருடம் அவ்வாறு நான் கிரையம் வாங்கினேன் என்றால் 1989ல் கிரையம் வாங்கினேன்.

6. 1989ல் சாமையா பெயரில் உள்ள பட்டாவை நான் கண்கூடாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். வாதி கிரையம் பெறும்போதும் சாமையா பெயரில்தான் பட்டா இருந்ததை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சொல்வது போல் நான் கிரையமே பெறவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் கிரையம் பெற்ற ஆவணத்தின் நகல் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் 01.03.1989ம் தேதியிட்ட கிரைய ஆவணம் புகைப்பட நகல் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி ஆவணம் என் அப்பா கிரையம் வாங்கியதாக

உள்ளது என்றால் நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்தபோது என் பெயரில் வாங்கினால் தம்பிகளுக்கு பங்கு வரும் என்பதால் என் அப்பா பெயரில் எழுதி வைத்தேன். நான் வாங்கி என் தந்தையார் மீது எழுதி வைத்தேன் என்ற வாசகம் எதுவும் பி.வா.சா.ஆ 1 ல் இல்லை என்றால் சரிதான்.

7. பி.வா.சா.ஆ 1 ஆவணத்திலும் சாமையா பெயரில் பட்டா இருந்தது என்ற வாசகம் இல்லை என்றால் குறிப்பிடவில்லை. அரசன் எனது கிரையதாரர் ஆதிமூலம் மீதும் துரை மீதும் என் மீதும் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.616/1989 என வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அ.வ.எண்.616/1989 ல் அரசனுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் ஒருதரப்பு தீர்ப்பானது. நான் மேல் முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் என் அப்பா பெயரில் சொத்து இருந்ததால் நான் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை.

8. அ.வ.எண்.616/1989 ல் ஆதிமூலமும் துரையும் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு கிரையம் கொடுக்கும் முன்பே நீதிமன்றத்தில் அரசனுக்கு தீர்ப்பு ஆகிவிட்டது என்றாலும் அதனால் ஆதிமூலத்திற்கு கிரையம் கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்றாலும் 1989 ல் ஆதிமூலம் கிரையம் கொடுத்துவிட்டார். 1990 ல் என் மீது வழக்கு தாக்கல் செய்தார். குப்பன் அ.வ.எண்.1/1993 ல் அரசன், கிளியம்மாள், கருணாகரன் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

9. என் அப்பா குப்பன் அ.வ.எண்.1/1993 யை வாபஸ் பெற்றுக் கொண்டு நீதிமன்ற கட்டணத்தையும் திரும்ப பெற்றுவிட்டார் என்றால் இல்லை. நான் பிரதிவாதிகள் மீது சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.54/2019 ஆகும். அ.வ.எண்.54/2019 ல் இந்த வழக்கு வாதிகள் எனக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வேண்டும் என்பதற்காகவும் என் தூண்டுதல் பேரில் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்பு நானோ, வாதிகளோ இதுவரை உட்பிரிவு செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா மாறுதலுக்கு மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பட்டா இதுவரை என் பெயரிலோ, வாதிகள் பெயரிலோ மாறவில்லை என்றால் உட்பிரிவு ஆகாததால் மாறவில்லை. 1961 முதல் பட்டா அரசன் மீதுதான் உள்ளது என்றாலும் இதுவரை அவர்தான் பட்டா செலுத்தி

வருகிறார் என்றாலும் எனக்கு தெரியாது. வாதி எந்தவித வரியும் செலுத்தவில்லை என்றால் வீடு கட்டி வரி செலுத்தி வருகிறார்.

11. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை தெரிந்துதான் நான் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தின் முதல் பத்தியில் **"நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பு சாட்சி ஆவேன். வாதி ஆறுமுகம் எனக்கு தெரியும். தாவா சொத்து விவரம் குறித்து எனக்கு தெரியும்"** என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறுமுகம் வழக்கில்தான் நான் சாட்சி சொல்வதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆறுமுகம் வழக்கில் சாட்சி சொல்லவில்லை. பெரியப்பன் வழக்கில் சாட்சி சொல்கிறேன்.

12. நான் எந்த வழக்கிற்கு வந்துள்ளேன் என்ற விவரமே எனக்கு தெரியாது என்றாலும் ஆறுமுகம் வழக்கிற்கு வந்துள்ளேன் என்றாலும் பெரியப்பன் வழக்கில் சாட்சி சொல்கிறேன். நான் ஆறுமுகம் வழக்கிற்கு சாட்சி சொல்வதால் என் சாட்சியத்தை பெரியப்பன் வழக்கில் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் பெரியப்பன் வழக்கில்தான் சாட்சி சொல்கிறேன். ஆறுமுகம் வழக்கிலும் நான்தான் சாட்சிசொல்ல போகிறேன் என்றால் என்னை அழைத்தால் சாட்சி சொல்ல போவேன். ஒருவேளை என்னை சாட்சி சொல்ல அழைத்தால் இதே பதிலை தான் அந்த வழக்கிலும் சொல்வேனா என்றால் இதே கேள்வியை கேட்டால் இதே பதிலை சொல்வேன். நான் தாக்கல் செய்துள்ள சார்பு நீதிமன்ற வழக்கில் சாட்சியம் அளிக்க பயிற்சிகாக நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அரசனுக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க நானும் வாதி பெரியப்பனும் வழக்கு தாக்கல் செய்து ஒருவருக்கு ஆதரவாக ஒருவர் சாட்சி சொல்கிறோம் என்றால் நான் மறுக்கிறேன்.

(மறு விசாரணை இல்லை)